# செய்திகளும் குறிப்புகளும்

**11.06.2026, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1164**

---

**ஸ்ரீ அரவிந்தர்**

**பகவத்கீதை – பேருரைகள் - 19.சமதை**

அந்த ஆன்மனானது, தத்துவஞானியின் புத்தி விளக்கம் பெற்ற ஆத்மனாகாது. அது முக்குணச் சேட்டைகளுக்கு அப்பாற்பட்ட, தெய்விக முனிவனின் அத்தியாத்மமேயாகும். எல்லாமே உயரிய ஆத்மீக இயல்பில் தெய்விகப் பிறப்பு அடைந்து நிறைவு எய்த வேண்டும்.

தத்துவஞானியின் சமதையானது கிரேக்க வைராகியினுடைய அல்லது உலகத்தினின்று ஓட்டம்பிடிக்கும் துறவியினுடைய சமதையைப் போன்றதே. அது மானிட சமூக வாழ்க்கையிலிருந்து விலகித் தனித்துநிற்கும் உள்ளச் சுதந்திரமாகும். ஆனால், தெய்விகப் பிறப்பு எய்திய மானுடன், இறைவனைத் தன்னிடம் மட்டுமன்றி, எல்லா உயிர்களிலும் காண்பவன்; எல்லாவற்றிலும் உள்ள தனது ஒற்றுமையை அனுபவித்திருப்பவன். ஆகவே, அவனுடைய சமதையானது அனுதாபமும் ஒருமையும் நிறைந்ததொன்று. அவன் யாவற்றையும் தானகவே காண்கிறான். தான் மட்டுமே தனித்து விமோசனமடைய வேண்டும் என்பது அவனது கருத்தன்று. மற்றவர்களின் இன்பதுன்பங்கள் தன்னைப் பாதிக்காவிடினும், அவற்றைத் தன்மீதும் ஏற்றிக்கொள்ளுகிறான். சித்தியடைந்த ஞானி, விரிந்த சமதையுடன் எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்வதிலேயே எப்போதும் கருத்தூன்றி நின்று, அதில் இன்பங்கொள்ளுகிறான். பரிபக்குவமடைந்த யோகியானவன், தனது கற்கோட்டையில் தனித்தமர்ந்து தன் ஆத்மனைப் பற்றியே சதா சிந்தனை செய்துகொண்டிருப்பவனல்லன். அவன் உலக நன்மையின் பொருட்டும், உலகத்தில் கடவுள் மேன்மேலும் வெளிப்பாடு அடைவதன் பொருட்டும் பலதிறப்பட்ட கருமங்களில் ஈடுபடுபவன். அவன் வெறும் ஞானி அல்லது யோகியாக மட்டுமில்லை. அவன் பக்தன்; இறைவனின் அன்பன். அவன் கடவுளை எங்கும் கண்டு அவனுக்கு அன்பு செய்கிறான். அவன் அன்பு செலுத்தும் பொருளுக்கு ஊழியம் செய்வது இழிவெனக் கொள்ளுவதில்லை. அவன் இறைவனுடன் ஒன்றுவத னால் அடையப்பெறும் பேரின்பத்தை, கருமம் செய்வதனால் இழந்துவிடுவதில்லை. ஏனெனில், அவன் செயல்கள் யாவும் அந்த ஏகனிடமிருந்தே வருவன; அவனை நோக்கியே செல்வன. கீதையின் சமதையனது யாவற்றையும் தன்னுட்கொண்ட விரிவான சமதையாகும். அதனால் எல்லாமே இறைவனின் இருக்கையி னுடையவும் இயல்பினுடையவும் பரிபூரண நிலைக்கு உயர்த்தப்படுகின்றன.

**20. ஞானமும் சமதையும்**

கீதையின் போதனையின் இந்த ஆரம்பப் பகுதியில், யோகமும் ஞானமுமே, இறைவனை நோக்கி உயர்ந்து செல்லும் ஆன்மாவுக்கு இரு இறக்கைகளாகும். எல்லாப் பொருள்களிடமும் பற்றில்லாமலும், மக்களிடமும் சம உள்ளங்கொண்டும், பரமனுக்கு வேள்வியாகப் பணிசெய்வதன் மூலம் அவனுடன் ஐக்கியப்படுவதே யோகம். இப்பற்றின்மைக்கும், இச்சமதைக்கும் இவ்வேள்வியின் வலிமைக்கும் ஆதாரமாக விளங்குவது ஞானம். இவ்விரு இறக்கைகளும் ஒன்றுக்கொன்று உதவியாக நிற்பன. இவை சேர்ந்து வேலை செய்யும்போது, மனிதனிடமுள்ள இரு கண்கள் மாறிமாறிப் பார்ப்பதால் ஒருங்கே பார்ப்பது போல, தங்களது சாராம்சத்தைப் பரஸ்பரம் பரிவர்த்தனை செய்துகொண்டு, தங்களை அதிகரித்துக்கொள்ளுகின்றன. மேன்மேலும் பற்றற்றும், சம மனங்கொண்டும், வேள்வியாகவும் பணி செய்யப்படும்போது, ஞானம் அதிகரிக்கின்றது. ஞானம் அதிகரிக்க அதிகரிக்க, ஆன்மாவானது பற்றற்றும், சமதையுடனும், வேள்வியாகவும் தன் பணியாற்ற மேன்மேலும் உறுதி கொள்ளுகின்றது. ஆகவேதான், பொருளைக் கொண்டு செய்யப்படும் வேள்வியை விட, ஞானவேள்வியே சிறந்ததெனக் கீதை கூறுகின்றது."பாவிகள் அனைவரையும்விட நீ அதிகப் பாவியாயிருந்தாலும், ஞானத்தோணியால் எல்லாவிதத் தீமைகளையும் வக்கிரங்களையும் கடந்து செல்வாய். இவ்வுலகில் ஞானத்தைப் போலத் தூய்மையான பொருள் வேறொன்றுமில்லை" (அ. 4. சு. 36-38). ஞானத்தினால் விருப்பமும் அதன் தலைச்சனான பாவமும் அழிகின்றன. மனமும் உள்ளமும் உணர்வும் ஞானத்தில் நிலைக்கப் பெற்று, பற்றுதலிலிருந்து விடுதலையடைந்த முத்தனே பணியை வேள்வியாகச் செய்யமுடியும். அவன் பணிகள் உடனே பிரம்மனில் லயமடைகின்றன (அ. 4, சு. 23). யாவும், ஆன்மாவை எவ்விதமாயினும் பாதிக்காமல் ஏனெனில், தோற்றத்திற்கு மட்டுமே அவன் பணி செய்வோனாக இருப்பான். இறைவனே அவனுடைய இயற்கையின் மூலமாகப் பணிசெய்வதால், இனி அப்பணி மானிடக் கருவிக்கு உரியதாகாது. பணியே இயற்கையின் ஆற்றலாயும், பிரம்மனின் உயிர்ப் பொருளாயும் உள்ளதுதானே.

இந்த அருத்தத்திலேதான், கருமங்கள் யாவும் ஞானத்தில் நிறைவு எய்தி முடிவு பெறுகின்றன எனக் கீதை கூறுகின்றது (அ. 4, சு. 33). "தீ விறகுகளைச் சாம்பலாக்கி விடுகிறது" (அ. 4, சு. 27) என அது கூறும்போது, பூரணஞானம் ஏற்பட்டபின் கருமங்கள் நின்றுவிடுகின்றன என அருத்தம் கொள்ளலாகாது. ஞானத்தினால் எல்லா ஐயங்களும் தீர்ந்து, யோகத்தினால் எல்லாக் கரு மங்களையும் துறந்து தன்னைத் தான் ஆள்வோன், தன்னுடைய கருமங்களால் கட்டுப்படுவதில்லை என்றும் (அ. 4, சு. 41) எல்லா உயிர்களும் தானே ஆனவன் கருமஞ் செய்கையில், அக்கருமங்கள் அவனை ஒட்டுவதோ, அவனது ஆன்மா அவற்றில் சிக்கிக்கொள்ளுவதோ இல்லை என்றும் அது கூறும்போது (அ. 5, சு.7),அதன் அருத்தம் தெளிவாகிறது. ஆகவேதான், கருமங்களை உடலால் துறப்பதைக் காட்டிலும், கருமயோகமே மேலென அது வலியுறுத்துகின்றது. ஏனெனில், உயிர்கள் உடலிலுள்ளவரையில் கருமம் செய்வது இன்றியமையாத தாகையால் அவைகளுக்கு துறவு கடினமாகும். ஆனால், கருமயோகம் ஆன்மாவை விரைவில் இறைவனடி சேர்ப்பதால் அதுவே முற்றிலும் போதுமானது. எல்லாக் கருமங்களையும் இறைவனுக்கு அர்ப்பணமாக ஈவதே அக்கருமயோகமென நாம் ஏற்கெனவே அறிவோம். அர்ப்பணம் எனில், புறத்தே தூலமாக அளிப்பதன்று; அவற்றின்மீதுள்ள பற்றுதலைக் களைந்து, அவற்றை இறைவன்மீது சார்த்திவிட்டு தொழில் புரிய வேண்டு மென்பதே கருத்தாகும் (அ. 5, சு. 10). கருமங்கள் இவ்வண்ணம் இறைவனின்மீது சார்த்தப்படும்போது, கரணமாக (கருவியாக)க் கருமஞ் செய்வோனின் தனித்தன்மை நீங்கிவிடுகிறது. அவன் தொழில் புரினும், தான் யாதொன்றும் செய்வதில்லை; ஏனெனில், அவள் கரும பலனை மட்டுமன்றி, கருமத்தையும், அதன் செய்கையையுங்கூட இறைவனுக்கு ஈந்துவிடுகிறான். கரும யோகம் இதில் முடிவடைகிறது. பின்னர், இறைவனே அவனிடமிருந்து கருமத்தின் பொறுப்பை ஏற்று, தானே கருமஞ் செய்வோனாகவும், கருமமாகவும், கரும பலனாகவும் ஆகிறான்.

கீதை உபதேசிக்கும் ஞானமானது, மன அறிவு அல்லது புத்தியின் ஒரு தொழிற்பாடு அல்ல. நமது "அஞ்ஞான இருளில் மறைந்து கிடக்கும் சூரியனான உண்மை" என ரிக்வேதம் கூறும் தெய்விக உண்மையொளியின் பிரகாசத்தைக் கொண்டு நமது சீவனின் மிக உன்னத நிலைக்குத் தேசுடன் வளர்ச்சியடைவதே இந்த ஞானமாகும். இருமைகள் கொண்ட கீழியற்கையின் குழப்பங்களுக்கு மேலாகவுள்ள அந்த சேதன வானில் அழிவற்ற பிரம்மன் பிரகாசிக்கிறான். கீழியற்கையின் பாவபுண்ணியங்கள் அவனைத் தீண்டுவதில்லை. இது பாவம், இது புண்ணியம் என்னும் நமது உணர்ச்சியை அவன் ஏற்பதில்லை. அவன் இன்பதுன்பங்கள் அவனைத் தொடுவதில்லை. வெற்றியினால் நாம் அடையும் களிப்பையோ, தோல்வியினால் நாம் அடையும் துயரத்தையோ அவன் ஏற்பதில்லை.

*(தொடரும்.....)*

## **தகவல்கள்** ( I N F O R M A T I O N )

**புராஸ்பெரிட்டியை நோக்கி – மேலும் சமூகப் பங்கேற்பிற்கான அழைப்பு**
(Towards Prosperity — Invitation for Further Community Engagement)

முந்தைய கருத்துகேட்பு மற்றும் குழு விவாதங்களில் பங்கேற்க இயலாத குடியிருப்பாளர்களின் வேண்டுகோளை ஏற்று, "புராஸ்பெரிட்டியை நோக்கி" ('Towards Prosperity') செயல்முறையின் ஒரு பகுதியாக எஃப்ஏஎம்சி ஒரு கூடுதல் அமர்வை ஏற்பாடு செய்துள்ளது.

இதில் பங்கேற்கத் திட்டமிடும் குடியிருப்பாளர்கள், முந்தைய சமூகக் கூட்டத்தில் வழங்கப்பட்ட விளக்கக்காட்சி மற்றும் அதைத் தொடர்ந்த கேள்வி-பதில் பகுதியைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:
https://www.youtube.com/watch?v=Pzfhdhrj_9Y&t=7306s

ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட பணிகளின் அடிப்படையில் விவாதத்தை முன்னெடுத்துச் செல்லவும், இதுவரை கவனிக்கப்படாத கேள்விகள், கவலைகள் அல்லது கருத்துக்களில் கவனம் செலுத்தவும் இது உதவும்.

**தேதி: 19 ஜூன் 2026 வெள்ளிக்கிழமை.**
**நேரம்: பிற்பகல் 3:00 மணி முதல் 5:00 மணி வரை.**
**இடம்: சினிமா பாரடிசோ, டவுன் ஹால்.**

இந்த அமர்வில் பின்வருவன இடம்பெறும்:
- இதுவரை மேற்கொள்ளப்பட்ட செயல்முறையின் சுருக்கமான கண்ணோட்டம்
- கருத்துக்கணிப்பு மற்றும் குழு விவாதங்களிலிருந்து வெளிப்பட்ட முக்கிய முடிவுகள் மற்றும் கருப்பொருள்கள்
- தற்போதைய செயல்பாட்டுத் திசைகள் மற்றும் பரிந்துரைகள்
- கேள்விகள், கருத்துகள் மற்றும் கூடுதல் ஆலோசனைகளைப் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்பு

கேள்விகளுக்குப் பதிலளிக்கவும், செயல்முறை மற்றும் பரிந்துரைகள் குறித்த சந்தேகங்களைத் தெளிவுபடுத்தவும் எஃப்ஏஎம்சி உறுப்பினர் ஒருவர் அங்கு இருப்பார்.

இச்செயல்முறையை மீண்டும் முதலிலிருந்து தொடங்குவது இதன் நோக்கமல்ல; மாறாக, அறிக்கை இறுதி செய்யப்படுவதற்கு முன், முந்தைய விவாதங்களில் பங்கேற்க முடியாத குடியிருப்பாளர்கள் இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள ஒரு வாய்ப்பை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

அன்புடன், *எஃப்ஏஎம்சி*

**போலெட் அவர்கள் எழுதிய கட்டுரை**

**2026-இல் ஸ்ரீ அன்னையின் 'புராஸ்பெரிட்டி' திட்டம்** (The Mother's  Prosperity in 2026)

ஸ்ரீ அன்னை மிகவும் நடைமுறைச் சிந்தனை கொண்டவர்; அவர் இல்லாவிட்டால் ஆசிரமமே தொடங்கியிருக்காது என்று ஸ்ரீஅரவிந்தர் குறிப்பிட்டார். அதன் நிர்வாக அமைப்பின் மிகச்சிறு விஷயம் வரை அவரே கவனித்து மேற்பார்வையிட்டார்; மக்கள் கூட்ட அறிக்கைகளை எழுத ஊக்குவிக்கப்பட்டனர், அவர் அவை அனைத்தையும் படித்து, கருத்துகளைத் தெரிவித்து வழிகாட்டினார். ஆரோவில்லுக்கும் அவர் அதே முறையையே பின்பற்றினார்.

ஸ்ரீ அரவிந்தர் ஆசிரம சாதகர்கள் சமர்ப்பித்த படிவங்களைப் போன்றே அமைந்திருந்த 'ஸ்ரீ அன்னையின் 'புராஸ்பெரிட்டி' திட்டம், அவர் வாழ்ந்த காலத்தில் இருந்ததைப் போலவே இன்றும் மிகச் சரியாகப் பொருந்தக்கூடியது; அதன் அடிப்படை உணர்வைப் பாதுகாத்துக்கொண்டு, 1968-இல் இருந்த 'தேவைகளை' இன்றைய தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைத்தால் மட்டுமே போதுமானது. ஆனால் முதலில் தெளிவுபடுத்த வேண்டிய விஷயம் என்னவென்றால், 'ஸ்ரீ அன்னையின் 'புராஸ்பெரிட்டி' என்பது ஊதியம் அல்லது பராமரிப்புத் தொகை (wages/maintenance) அல்ல; அதாவது "நான் வேலை செய்கிறேன், அதனால் எனக்கு ஊதியம் கிடைக்கிறது" என்ற முறையோ அல்லது நபருக்கு நபர் மாறுபடும் ஊதிய முறையோ இதில் இல்லை. இது முற்றிலும் மாறுபட்டது.

**"ஆரோவில் ஒரு தனிநபரின் தேவைகளையும் அவசியங்களையும் பூர்த்தி செய்யும்போது, அந்த நபர் தன்னிடம் உள்ள மற்றும் தன்னால் வழங்கக்கூடிய அனைத்துப் பொருட்களையும் ஆரோவில்லுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது"** என்று 'ஸ்ரீ அன்னையின் அனுமதிப் படிவத்தின் 5-வது விதி கூறுகிறது. 'ஸ்ரீ அன்னையின் 'புராஸ்பெரிட்டி' திட்டம் யாருக்காக பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டது என்றால்:

1) **பிழைப்புக்கு வேறு எந்த வழியும் (ஓய்வூதியம், அடுக்குமாடி குடியிருப்புகள், நிலங்கள், பரம்பரைச் சொத்துகள், வாழ்நாள் வருமானம் தரும் முதலீடுகள், குடும்பம் அல்லது நண்பர்களிடமிருந்து வரும் உதவித்தொகை, எந்த வகையிலான சொத்துகளும், இலாபம் போன்றவை) இல்லாதவர்கள்.**
2) **அல்லது, தன்னிடம் இருந்த அனைத்தையும் (ஆரோவில்லுக்காக) ஒப்படைத்தவர்கள்**.

'ஸ்ரீ அன்னை' சுட்டிக்காட்டிய இந்த இரண்டு பிரிவினருக்கு மட்டுமே ஆரோவில்லின் பொறுப்பைச் சுருக்குவது என்பது, பெருமளவிலான நிதியைத் தானாகவே மிச்சப்படுத்தும். இதனுடன், ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம் ஐந்து மணிநேரம் (ஞாயிற்றுக்கிழமை உட்பட) வேலை செய்ய வேண்டும் என்பது மூன்றாவது கட்டாயத் தேவையாகும் (ஞாயிற்றுக்கிழமை விலக்கப்பட்டால் ஆறு மணிநேரம்). இவை அனைத்தும் 1971-இல் ஸ்ரீ அன்னையால் அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ்வாறு தகுதிபெற்ற ஆரோவில் வாசிகளின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்ற கணிசமான தொகை தேவைப்படுகிறது; எனவே, புதிய விண்ணப்பதாரர்களைச் சில மாதங்கள் சோதித்துப் பார்த்து, கடுமையான விதிமுறைகளைப் பின்பற்றுமாறு 'ஸ்ரீஅன்னை' ஷியாம் சுந்தருக்கு அறிவுறுத்தினார். இத்தகைய கடுமையான அடிப்படையில், ஷியாம் சுந்தர், பிரபா பென் ஆகியோர் மூலம் ஸ்ரீ அரவிந்தர் சொசைட்டி ஸ்ரீ அன்னையின் 'புராஸ்பெரிட்டி" திட்டத்தைச் செயல்படுத்தியது; ஸ்ரீ அன்னையின் மறைவுக்குப் பிறகும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.

### *இன்று ஆரோவில்லில் இதை எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம்?*

ஆசிரமம் அல்லது ஆரோவில் - எங்குமாயினும், 'புராஸ்பெரிட்டி' (Prosperity) திட்டத்திற்கான விண்ணப்பப் படிவங்கள் ஒரே மாதிரியாகவே இருந்தன; அவை குறிப்பாக மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு வகைகளைச் சார்ந்தவை: அ) வாழ்வாதாரத்திற்கு வேறு வழிகள் இல்லாதிருத்தல், ஆ) அனைத்தையும் நன்கொடையாக வழங்கியிருத்தல். ஸ்ரீஅரவிந்தர் ஆசிரமம் உணவு, உடை மற்றும் தனிப்பட்ட சுகாதாரப் பொருட்கள் மட்டுமல்லாமல், தங்குமிடம், தளபாடங்கள், வீட்டு உபகரணங்கள், போக்குவரத்து மற்றும் கண்ணியமான அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் வழங்குகிறது; ஆடம்பரம் மற்றும் வீண் செலவுகள் இல்லாமல், அதே சமயம் வளங்களைப் பயன்படுத்துவதில் கஞ்சத்தனம் இல்லாமலும் இவை வழங்கப்படுகின்றன. ஆரோவில்லுக்கும் ஸ்ரீ அன்னை இதையே விரும்பினார்.

அடிப்படைத் தத்துவத்தின் அடிப்படையில், தற்காலத்தில் எஃப்ஏஎம்சி/பிசிசி (FAMC/BCC) அமைப்பு பின்வருவனவற்றை வழங்க வேண்டும்:

1) இலவச தங்குமிடம் (மக்கள் அதற்கான கட்டணத்தைச் செலுத்த முடியாத பட்சத்தில்). குடியிருப்பாளர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வீட்டின் அளவு அமையும்: தனிநபர்களுக்கு 30 சதுர மீட்டர் மற்றும் பொதுப் பயன்பாட்டு இடங்கள், நான்கு பேர் கொண்ட குடும்பத்திற்கு 75 சதுர மீட்டர் போன்றவை. தேவைக்கேற்ப வீட்டின் அளவைக் குறைக்கவும் அதிகரிக்கவும் ஏதுவாக நகர்த்தக்கூடிய தடுப்புகளை (mobile partitions) ரோஷே ஆன்ஷே விரும்பினார்.
2) கட்டிடங்கள் மற்றும் சொத்துக்களுக்கான இலவச பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு.
3) இலவச பொதுக் கட்டமைப்பு வசதிகள்.
4) பயன்பாட்டிற்கு ஏற்ற தளபாடங்கள்.
5) உணவு மற்றும் மளிகைப் பொருட்கள்.
6) உடை மற்றும் தனிப்பட்ட சுகாதாரப் பொருட்கள்.
7) இலவச சேவைகள் (மின்சாரம், சூரிய ஆற்றல், தண்ணீர், எரிவாயு, சாலைகள்).
8) போக்குவரத்து (மாசு ஏற்படுத்தாத வாகனங்கள்; கார்கள் அனுமதிக்கப்படாது).
9) மருத்துவக் காப்பீடு, மருத்துவமனைச் சிகிச்சை, மருந்துகள், தெரப்பிகள் மற்றும் யோகா வகுப்புகள்.
10) கிண்டர்கார்டன் முதல் கல்லூரி வரை இலவசக் கல்வி. ஆரோவில்லில் அதற்கான கல்வி நிறுவனம் இல்லாத பட்சத்தில், வெளியிலுள்ள கல்வி நிறுவனத்திற்கான கட்டணத்தைச் செலுத்துதல் (ஆசிரமத்திற்கு எனத் தனியாகக் கல்லூரி உள்ளது).
11) பெரியவர்களுக்கான சிறப்புப் பயிற்சிகள் அல்லது திறன் மேம்பாட்டுப் படிப்புகள்.
12) தொலைபேசி/மொபைல் போன், இன்டெர்நெட், லேப்டாப்/கம்பியூட்டர் (அதற்கான உதிரிபாகங்கள் மற்றும் மேம்படுத்தல்களுடன்).
13) அன்றாடப் பயன்பாட்டு உபகரணங்கள் (ஃபேன்கள், ஃபிரிட்ஜ், வாஷிங் மெஷின், வேக்கியும் கிளீனர், இண்டக்ஷன்/கேஸ் ஸ்டவ் போன்றவை).
14) அவசியமான ஆவணங்களுக்கான கட்டணத்தைச் செலுத்துதல் (பாஸ்போர்ட்/அடையாள அட்டை, விசா, பிறப்பு/இறப்புச் சான்றிதழ் மற்றும் தேவைப்படக்கூடிய பிற ஆவணங்கள்).
15) ஆரோவில்லுக்கான சேவையைத் தொடரத் தேவைப்படும் எந்தவொரு உபகரணமும் அல்லது திட்டமும். அத்தகைய 'சொத்து' அதைத் தற்காலிகமாகப் பயன்படுத்தும் தனிநபருக்கு மாற்றப்படாது; அது ஆரோவில்லின் வசமே இருக்கும்.

ஸ்ரீ அன்னையின் 'புராஸ்பெரிட்டி"-இன் ஒரு முக்கியக் கொள்கை என்னவென்றால், அனைத்தும் பொருளாகவும் நியாயமான முறையிலும் வழங்கப்பட வேண்டும்; ரொக்கம் என்பது சில்லறைப் பணம்/அவசரத் தேவைகளுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டது. இந்த வழியில், ஆரோவில் பெரும் தொகையைச் சேமித்தது, அது செயல்திறனையும் நேர்மையையும் உறுதிசெய்யும் வகையில் முறையாகப் பயன்படுத்தப்பட்டது. ஸ்ரீ அன்னையின் "புராஸ்பெரிட்டி' அத்தியாவசியத் தேவைகளை உறுதி செய்தது, ஆனால் அளவுகளையும் கால அட்டவணைகளையும் நிர்ணயித்தது, அதனால் திறம்படத் தேவைப்படும்போது மட்டுமே பணம் செலவிடப்பட்டது. இன்று இதைப் பயன்படுத்தும்போது, வீட்டு உபகரணங்கள் மற்றும் சாதனங்களுக்கு உத்தரவாதம் உண்டு; உத்தரவாதம் காலாவதியான பின்னரே புதியவை தேவைப்பட வேண்டும்.

ஸ்ரீ அன்னையின் 'புராஸ்பெரிட்டிக்குத்' தகுதியான இரண்டு பிரிவுகள் ஆசிரமத்தில் இருந்ததைப் போலவே உள்ளன; ஆனால் ஒரு வித்தியாசம் என்னவென்றால், இங்கே ஸ்ரீ அன்னை வேலையாட்களையோ அல்லது ஊதியம் பெறும் தொழிலாளர்களையோ ஏற்றுக்கொள்ளவில்லை: அவர்களும் ஒருங்கிணைக்கப்பட்டு ஆரோவில் 'புராஸ்பெரிட்டி' வழங்கப்பட வேண்டும். ஸ்ரீ அன்னையுடன், அவர்களின் குழந்தைகள் ஆரோவில் குழந்தைகளுக்கு இணையாகப் பள்ளிக்குச் சென்றனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக, அறங்காவலர்கள், நிர்வாகிகள், கட்டிடக் கலைஞர்கள், திட்டமிடுபவர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், நிரலாளர்கள், எழுத்தாளர்கள், சமையல்காரர்கள், வரவேற்பாளர்கள், தோட்டக்காரர்கள் அல்லது ஒருவர் தேர்ந்தெடுக்கும் எந்த வேலைக்கும் இடையில் அவர் எந்த வேறுபாட்டையும் காட்டவில்லை. அவருடைய 'புராஸ்பெரிட்டி'அனைவருக்கும் ஒன்றுதான்: இறை உணர்விற்கு விருப்பத்துடன் தொண்டு செய்பவர்கள்.

ஸ்ரீ அன்னையின் ஆரோவில் என்பது பணமற்ற, தனியார் சொத்து இல்லாத, தனிப்பட்ட இலாபம் இல்லாத, சமூக வர்க்கங்களும் தகுதி வேறுபாடுகளும் இல்லாத ஒரு இலட்சிய சமூகம். அனைவரின் நலனுக்காகவும் அனைத்தும் அனைவருக்கும் சொந்தமானது. கூட்டு தெய்வீகத்திற்கு சேவை செய்வதில் ஒன்றுபட்டு, ஒரே படிநிலை ஆன்மீகமானது: இதுவே ஆரோவில் உணர்வுநிலை. இவ்வாறு, அதிமன மனிதர்களின் ஞான சமூகத்திற்கான ஏற்றம் தொடங்குகிறது.

*போலெட்*

---

**ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள் – கஷ்டங்களின் காரணமும் பயனும்**

**எங்கேயோ உள்ள எதிர்ப்பினால், உருமாற்ற வேலையை எதிர்க்கும் ஏதோ ஒன்றினால்தான் இந்தத் தொல்லைகள் எல்லாம் வருகின்றன என்பதில் சந்தேகமில்லை.**

**எப்பொழுதும் நம்முள் மறைந்திருக்கின்ற, வெல்லப்பட வேண்டிய பலவீனங்களை வெளிப்படுத்தவே சந்தர்ப்பங்கள் வருகின்றன.**

### நாய்களிடையே 'கனைன் டிஸ்டெம்பர்' நோய் பரவல் (Outbreak of canine distemper among dogs)

அன்பிற்குரிய ஆரோவில் சமூகத்தினரே,
ஆரோவில் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள நாய்களிடையே 'கனைன் டிஸ்டெம்பர்' (Canine Distemper) எனும் நோய் பரவி வருவது குறித்து, டாக்டர் ஷக்தி (புதுச்சேரி), டாக்டர் குமார் (ஆரோவில் நாய்கள் காப்பகம்) ஆகியோரிடமிருந்து ஒரு கடிதத்தை செயற்குழு வரப்பெற்றுள்ளது.

சமூக உறுப்பினர்கள் அனைவரும் அக்கடிதத்தை கவனமாக வாசித்து, தங்கள் நாய்களைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாங்கள் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இந்நோய் மேலும் பரவாமல் தடுப்பதற்கு உங்கள் ஒத்துழைப்பு மிகவும் இன்றியமையாதது ஆகும்.

எங்கள் நல்வாழ்த்துகளுடன், *அனு, அருண், ஜோசெபா, பார்த்தா, செல்வராஜ் - செயற்குழு, ஆரோவில்*

---

## அறிவிப்புகள் (Announcements)



Savitri BHAVAN

**ஜூன் 17 புதன்கிழமை அன்று மாலை 4:00 முதல் 5:00 மணி வரை**
**Essays on the Gita (கீதை குறித்த கட்டுரைகள்)**
**சுருக்கம் மற்றும் முடிவுரை**
**வழங்குபவர்: டாக்டர் அலோக் பாண்டே**
இடம்: சாவித்திரி பவனில் உள்ள சங்கமம் ஹால்
அனைவரும் வருக.

---

### பராகாவில் மாம்பழங்கள் கிடைக்கிறது (Mangoes Available at Baraka)

பராகாவில் மாம்பழ சீசன் தொடங்கிவிட்டது; அவற்றை வாங்கிச் செல்ல வாருங்கள். எங்களிடம் ஊறுகாய்களும் உள்ளன; விரைவில் மாம்பழ ஜாமும் கிடைக்கும்.

---

### ஆரோவில்லில் வசித்து, பணிபுரியும் இளைஞர்களுக்கு (For young people living and working in Auroville)

ஆரோவில்லில் உள்ள பயிற்சி பெறுநர்கள் (interns), இளம் தன்னார்வலர்கள், புதிதாய்ச்சேர்ந்தவர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் ஆர்வமுள்ள இளைஞர்களே... இந்தச் செய்தி உங்களுக்கானது.

பல தசாப்தங்களாக, இந்தியாவில் இருந்தும் உலகின் பல பகுதிகளில் இருந்தும் இளைஞர்கள் இங்கு வந்து கற்றுக்கொள்ளவும், பணியாற்றவும், புதியவற்றை ஆராயவும், ஆரோவில் எனும் சாத்தியக்கூறு கொண்ட அந்த அற்புதமான பயணத்தில் பங்கேற்கவும் செய்கிறார்கள்.

உங்களில் பலர் ஒரு குறிப்பிட்ட திட்டம், பயிற்சி (internship/apprenticeship), தன்னார்வத் திட்டம் அல்லது பணித் துறை ஆகியவற்றின் மூலம் இங்கு வந்திருக்கலாம்; அல்லது ஆரோவில்லின் இளைஞர்களாக, இன்று ஒன்று அல்லது இரண்டு குறிப்பிட்ட பணித் துறைகளில் ஈடுபட்டிருக்கலாம்.

இருப்பினும், ஆரோவில் என்பது ஏதேனும் ஒரு தனிப்பட்ட பிரிவு, தொழில் அல்லது செயல்பாட்டுத் துறையை விட மிகப் பெரியது.

உங்கள் தற்போதைய பணிக்கு இணையாக, ஆரோவில்லில் வசித்து பணிபுரியும் பிற இளைஞர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் ஒரு கூடுதல் கற்றல் பயணத்தில் பங்கேற்க சையர் (SAIIER) உங்களை அழைக்கிறது. வாழ்வின் அர்த்தம், நோக்கம், கல்வி, மனிதவள மேம்பாடு மற்றும் ஆரோவில் உருவானதற்கான ஆழமான பின்னணி ஆகியவை குறித்த கேள்விகளை நாம் ஒன்றாக இணைந்து ஆராய்வோம். இதில் 'ஸ்ரீ அன்னை' மற்றும் ஸ்ரீ அரவிந்தரின் படைப்புகள் குறித்த அறிமுகம், முன்னேற்றம் குறித்த தலைப்பில் சக இளைஞர்களுடனான கலந்துரையாடல்கள் மற்றும் சமச்சீரான, முழுமையான வளர்ச்சியின் ஒரு பகுதியாக உடற்கல்வியின் பங்கு குறித்த புரிதல் ஆகியவை அடங்கும்.

உங்கள் பணி அட்டவணைக்கு உள்ளேயே இதற்கென ஒரு இடத்தை உருவாக்குவதே இதன் நோக்கம்; இதன் மூலம் வாழ்வின் அர்த்தம் மற்றும் நோக்கம் குறித்த கேள்விகளை ஆராயவும், அன்றாட வாழ்க்கையின் நடைமுறைப் பணிகளை ஒரு பரந்த கண்ணோட்டத்துடன் அணுகவும் முடியும்.

இந்த வாய்ப்பை ஆராய்ந்து பார்ப்பதற்காக ஆரோவில்லில் உள்ள பல்வேறு யூனிட்டுகளுக்கு (units) மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளது.
மேலும், இதில் உங்களுக்கு ஆர்வம் இருந்தால், இந்த ஆய்வுப் பயணத்தில் உங்களுக்குத் தேவையான ஆதரவு கிடைப்பதும் உறுதி செய்யப்படும்.

இந்த முயற்சி உங்களுக்குப் பொருத்தமானதாகத் தோன்றினால், ஒரு சிறிய படிவத்தை பூர்த்தி செய்யுமாறு உங்களை அழைக்கிறோம்.

அடுத்த வாரம் உங்களை முதல் சந்திப்பிற்காக நாங்கள் தொடர்பு கொள்வோம்.
உங்களைச் சந்திக்க ஆவலுடன் காத்திருக்கிறோம். *ஆரேவன், சையர் சார்பாக.*

---

## 'பிராணசக்தி' நிகழ்ச்சிகள் (Pranashakti Events)

ஆரோவில் குடியிருப்பாளர் சமூகத்தினருக்காக நடத்தப்படுகின்றன; இதில் ஆரோவில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மே, ஜூன் மாதங்களில் தொடர்ச்சியான அமர்வுகள் நடைபெறவுள்ளன. உங்களுக்கு விருப்பமான அல்லது பொருத்தமான எந்தவொரு அமர்விலும் அல்லது அனைத்திலும் கலந்துகொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறோம். பதிவு செய்ய, கீழே உள்ள இணைப்பைக் கிளிக் செய்யவும் அல்லது கியூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யவும்.

### வெளிப்புற விளையாட்டுகள் (Outdoor Games)

***'பிளேஹுட்' (Playhood) - நடத்துபவர்: நடாஷா (விளையாட்டு வழிநடத்துநர்)***

எளிய வெளிப்புற விளையாட்டுகள் மூலம் இயக்கம், பிணைப்பு மற்றும் விளையாட்டின் மகிழ்ச்சியை அனுபவியுங்கள். மனதை ஆசுவாசப்படுத்திக் கொள்ளவும், மற்றவர்களுடன் இணையவும், விளையாட்டின் உற்சாகத்தை மீண்டும் கண்டறியவும் இது ஒரு சிறந்த வாய்ப்பு.

- வியாழக்கிழமை தோறும்: மே 28 முதல் ஜூன் 25 வரை, மாலை 5:00 - 6:30 மணி
- https://forms.gle/FdZbBuTF9LLf41gT6

### உள்ளுணர்வுடன் கூடிய வெளிப்பாடு (Conscious Expression)

***அழகு ஒரு அடித்தளமாக (Beauty as base) - அபேத்யா***

அழகியல் செயல்பாடுகள் மூலம் அக அமைதி. நிறம், வடிவம் மற்றும் ஆக்கப்பூர்வமான வெளிப்பாடுகள் வழியாக அழகைப் பற்றிய புரிதலை ஆழப்படுத்திக்கொள்ளவும், கலைப்படைப்புகளில் உள்ள இசைவு எவ்வாறு ஒருவருக்குள் ஆழமான அழகியல் உணர்வை எழுப்புகிறது என்பதைக் கண்டறியவும் விரும்பும் அனைவருக்கும் ஏற்ற 3-பகுதி கொண்ட நிகழ்ச்சி இது.

நடத்துபவர்: அபேத்யா பகவான் (காட்சிக் கலைஞர் மற்றும் தேடல் கொண்டவர்). இவர் அழகு, இசைவு மற்றும் உள்ளுணர்வுடன் கூடிய படைப்பாற்றல் ஆகியவற்றை அக வளர்ச்சி மற்றும் சுய-கண்டறிதலுக்கான பாதைகளாகக் கொண்டு செயல்படுபவர்.

- வெள்ளிக்கிழமை தோறும்: ஜூன் 12, 19, 26, மாலை 4:30 - 6:00 மணி
- https://forms.gle/gRdLCRo4nvrgZgfPA

***அந்தர்த்வனி (Antardhwani) - நடத்துபவர்: பிரியா***

இந்தியச் செவ்வியல் இசை (Indian Classical Music) மூலம் சுய விழிப்புணர்வு. ஒலி வழியாகத் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளவும், தங்களுக்குள் இருக்கும் ஆழமான அக அதிர்வுகளுடன் (inner resonance) இணையவும் விரும்பும் அனைவருக்கும் ஏற்ற 4-பகுதி கொண்ட இசைப் பயிற்சி இது. நடத்துபவர்: பிரியா (20 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் வாய்ந்த இந்தியச் செவ்வியல் இசைப் பயிற்சியாளர்). இவர் தற்போது புலன்களின் ஒருங்கிணைந்த கல்வி (integral education of the senses) மூலம் ஒலியுடனான ஆழமான உறவை ஆராய்ந்து வருகிறார்.

- செவ்வாய்க்கிழமை தோறும்: ஜூன் 16, 18; வியாழக்கிழமை தோறும்: ஜூன் 23, 25; மாலை 5:00 - 6:00 மணி
- https://forms.gle/XUJL9UFYQAWfTebz6

***தன்னிச்சையான வெளிப்பாடு / இம்ப்ரோவைசேஷன் (Improvisation) - நடத்துபவர்: மிஷா***

அகத்தே தேடுதல்: உடலின் வழியாக 'ஒருங்கிணைந்த உளவியலை' (Integral psychology) அறிந்துகொள்ளுதல். நமது இருப்பின் பல்வேறு நிலைகள், பரிணாம ஆற்றல் மையங்கள், சுவாசப் பயிற்சிகள் ஆகியவை குறித்த ஆழமான உடல்-சார்ந்த விழிப்புணர்வைப் பெறுதல். வெளிப்படையான வெளிப்பாடு: உடனடிச் செயல்பாடு (improvisation), தாளம், தன்னிச்சையான செயல் மற்றும் அசைவு ஆகியவற்றை ஆராயும் ஒரு முயற்சி – இதில் உடல் ஒரு ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டு, முழுமையான ஈடுபாடு மற்றும் வெளிப்பாட்டுத் திறன் ஆகியவை ஆழப்படுத்தப்படுகின்றன.

- திங்கள்: பிற்பகல் 2–4 மணி; புதன்: பிற்பகல் 2–5 மணி
- https://forms.gle/vZyuWjFGKCQacU7r6

### ஸ்ரீ அன்னையின் அருள்மொழிகள் – கஷ்டங்களின் காரணமும் பயனும்

**எப்பொழுதும் ஒரு எதிர்ப்பின் காரணமாகவே கஷ்டங்கள் உண்டாகின்றன. ஜீவனின் ஒரு பாகம் அல்லது பல பாகங்கள் அவற்றின்மீது போடப்படும் சக்தி, உணர்வு, ஒளி ஆகியவற்றை ஏற்க மறுத்து, தெய்வச் செல்வாக்கை எதிர்த்துக் கிளர்ச்சி செய்வதால் உண்டாகின்றன. இந்தக் கஷ்டங்களில் ஒன்றையோ பலவற்றையோ எதிர்கொள்ளாமல் இறைவனின் சங்கற்பத்திற்கு பூரணமாகச் சரணாகதி செய்துவிடுவது மிகவும் அரிது. தனது ஆர்வத்தில் உறுதியாக இருப்பதும், பூரண நேர்மையுடன் தன்னை நோக்குவதுமே எல்லாத் தடைகளையும் வெல்வதற்கு நிச்சயமான முறை.**

## சாதனா ஃபாரஸ்ட்டில் வெள்ளிக்கிழமை தோறும் ஈக்கோ பிலிம் கிளப்
(Eco Film Club, every Friday at Sadhana Forest)

நிகழ்வுகளின் அட்டவணை:
16:00 சோலார் கிச்சனிலிருந்து சாதனா ஃபாரஸ்ட்டிற்கு சென்று பார்க்க இலவசப் பேருந்து
16:30 சாதனா ஃபாரஸ்ட்டை சுற்றிப்பார்த்தல்
18:00 சோலார் கிச்சனிலிருந்து சாதனா ஃபாரஸ்ட்டிற்கு ஈக்கோ பிலிம் கிளப்பிற்கு இலவச பேருந்து
18:30 ஈக்கோ பிலிம் கிளப் ஆனது சாதனா ஃபாரஸ்ட் படங்களின் "முன்னோட்டத்துடன்" தொடங்குகிறது
20:00 இரவு உணவு உபசரிப்பு
21:15 சாதனா ஃபாரஸ்ட்டில் இருந்து சோலார் கிச்சனுக்கு திரும்பிவர இலவசப் பேருந்து

திரைப்படத்திற்கு முன், சரியாக 16:30 மணிக்கு சாதனா ஃபாரஸ்ட்டை முழுவதும் சுற்றிப்பார்க்க எங்களின் மிகச் சமீபத்திய பணிகள் குறித்த தகவல்களைத் தெரிந்து கொள்ள எங்களுடன் சேர உங்களை வரவேற்கிறோம்! திரைப்படத்திற்குப் பிறகு, இலவச 100% சைவ இயற்கைமுறை இரவு உணவிற்கு எங்களுடன் சேர உங்களை வரவேற்கிறோம்!

இப்பேருந்து சேவை சாதனா ஃபாரஸ்ட்டால் இயக்கப்படுகிறது. பேருந்து சேவை பற்றிய கூடுதல் தகவலுக்கு சாதனா ஃபாரஸ்ட்டை வாட்ஸ்அப்பில் 8525038274 அல்லது 8122274924 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.
**குறிப்பு: குடும்பங்கள் மற்றும் குழந்தைகள் வரவேற்கப்படுகிறார்கள்! குழந்தைகளுக்கு இரவு உணவு 19:00 மணிக்கு வழங்கப்படும்.



**ஜூன் 12 வெள்ளிக்கிழமை, Last Chance to See – Blue Whale** (காண்பதற்கான கடைசி வாய்ப்பு - நீலத் திமிங்கலம்) - **59 நிமிடங்கள் / 2009 / டிம் கிரீன்.**

பாஜாவில் உள்ள சான் இக்னாசியோ காயல், சாம்பல் நிறத் திமிங்கலங்களின் 10,000 மைல் நீளமுள்ள வலசைப் பாதையின் மையப் புள்ளியாகும். இது அனைத்து பாலூட்டிகளின் மிக நீண்ட வலசைப் பயணங்களில் ஒன்றாகும். அவை இங்கு இனப்பெருக்கம் செய்யவும், குட்டி ஈனவும், தங்கள் குட்டிகளை இந்தக் காயலின் பாதுகாப்பில் வளர்க்கவும் வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் இதே நேரத்தில் அவை இங்கு வருவதால், இது மிகவும் உறுதியான வனவிலங்குக் காட்சிகளில் ஒன்றாக விளங்குகிறது. இருப்பினும், இந்த வழக்கமான வருகை, திமிங்கல வேட்டைக்காரர்களுக்கு அவற்றை எளிதில் இரையாக்கியதுடன், ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான திமிங்கலங்கள் கொல்லப்பட்டன. தற்போது பாதுகாக்கப்பட்டுள்ளதால், சாம்பல் நிறத் திமிங்கலங்களின் எண்ணிக்கை மீளத் தொடங்கியுள்ளது.

## நகரத் திட்டமிடல் குறித்த ஆரோவில் செயல் கருத்தரங்கு (Auroville Action Seminar on Town Planning)

அன்பான நண்பர்களே,
ஆரோவில் பவுண்டேஷனும், ஏடிடிசி-யும் இணைந்து நடத்தும் ஒரு கூட்டுப்பணி அமர்விற்கு உங்களை அன்புடன் அழைக்கின்றன: **நகரத் திட்டமிடல் குறித்த ஆரோவில் செயல் கருத்தரங்கு.**

**ஜூன் 18, வியாழக்கிழமை அன்று, காலை 9:00 மணி முதல் மதியம் 12:30 மணி வரை யூனிட்டி பெவிலியனில்** நடைபெறவுள்ள இந்தப் பங்கேற்பு கருத்தரங்கம், ஆரோவில்லின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் பல்வேறு வழிகளில் தீவிரமாகப் பங்களிக்கும் குடியிருப்பாளர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஸ்வாட் (SWOT) பகுப்பாய்வில் ஈடுபடுவோம், தெளிவான நோக்கங்களையும் இலக்குகளையும் அமைப்போம், சாத்தியமான தீர்வுகளைக் கண்டறிவோம், அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிப்போம், மற்றும் தேவையான நிதிநிலை அறிக்கைகளை மதிப்பிடுவோம்.

பரந்த அளவிலான சமூகப் பங்கேற்பிற்காக, ஆரோவில் மண்டல வளர்ச்சித் திட்டம் ஸ்வாட் (SWOT) பகுப்பாய்விற்குத் திறக்கப்பட்டுள்ளது. ஆரோவில் மண்டல வளர்ச்சித் திட்டத்தை பின்வரும் இணைப்பில் அணுகலாம்: https://atdc.auroville.org/web/viewer.html

இந்த அமர்வில் கலந்துகொண்டு உங்கள் கருத்துக்களைப் பங்களிக்க விரும்பினால், william-atr@auroville.org.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதி உங்கள் வருகையை உறுதி செய்யவும்.
நல்வாழ்த்துக்கள், *வில்லியம் - ஏடிஆர் / எஃப்ஏஎம்சி*

## ஆரோ டென்ட், ஆரோமோட், ஆரோவில் வழங்கும்

**ஜூன், ஜூலை மாதத்திற்கு 0 முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவச பல் பரிசோதனை.**
முன்பதிவு செய்ய வாட்ஸ்அப்: 9629199328. தொலைபேசி: 0413-2622063

AURO DENT



## ஆரோவில், இந்திய அரங்கம், பாரத் நிவாஸ் வழங்கும்

**Sound of Soul (ஆன்மாவின் ஒலி) - இசைக் கச்சேரி**
**வழங்குவோர் - அர்னாப் பட்டாச்சார்யா (சரோத்), ராம் கட்சே (தபலா).**
**19 ஜூன் 2026 வெள்ளிக்கிழமை, மாலை 06:30 மணி**
**இடம்: சாச்சு, பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.